2017 ஜனவரி 27]

இரயில்வே பாலத்தைப் பற்றி சொன்னார்கள். அந்தப் பணி சம்பந்தமாக ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைந்து துவங்கப்பட்டு, பணிகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

துணை மின் நிலையம்

***2531—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதி, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியம், மேல்மலை பகுதியிலுள்ள பூம்பாறையில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை இந்த உலகிற்கு அடையாளம் காட்டி, இன்றையதினம் இல்லையென்றாலும்கூட எங்கள் இதயத்தில் எங்கள் குடும்ப தெய்வமாக இருக்கின்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பழனி தொகுதிக்குட்பட்ட பூம்பாறை பகுதிக்கு கொடைக்கானல் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், பூம்பாறை பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கின்ற அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜனவரி 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேல்மலை கிராமங்களில் ஒன்றாக இருக்கிற பூம்பாறை கிராமம் வரலாற்றுச் சிறப்புமிக்க சித்தர் போகர் அவர்கள் உருவாக்கிய நவபாஷாண சிலைகள் இருக்கிற ஓர் ஊராகும். உலகம் முழுவதிலுமிருந்து பக்தர்கள் அதிகமாக வருகிற ஊர் அந்த ஊர். குறிப்பாக சுற்றுலாத் தலங்களில் முக்கியமான பகுதியாக இருக்கிற ஊர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடைக்கானல் துணை மின் நிலையத்திலிருந்து சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார். நான் இந்த அவையில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறை இருந்திருக்கிறார். அந்த மலைப் பகுதியைப் பற்றி அவர் அறிவார். அந்தப் பகுதி மக்களுடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளையும் அவர் அறிவார். மழைக் காலங்களிலும், நல்ல காற்று வீசும் காலங்களிலும் அடர்ந்த வனப் பகுதிக்குள் இருக்கக்கூடிய மின் கம்பிகள் அறுந்து விழும்போது, பூம்பாறை மட்டுமல்ல, மேல்மலை கிராமங்களாக இருக்கிற, மன்னவனூர் ஊராட்சி, கூக்கால், பூண்டி ஆகிய ஊராட்சிப் பகுதிகளில் இருக்கிற பல கிராமங்களில் பல நாட்கள் மின் இணைப்பு இல்லாமல். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னொரு துணைக் கேள்வியிருக்கிறது. நீங்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மின் இணைப்பு இல்லாமல், அவதிப்படுகிற நிலையிருக்கிறது. அதனால்தான், மேல்மலைக்கென்று ஒரு தனி துணை மின் நிலையம் வேண்டுமென்று மக்கள் சார்பில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'மின்சார வசதி

2017 ஜனவரி 27]

சரியாக இல்லை, அதற்குக் காரணம், காற்றின் காரணமாக மரங்கள் விழுகின்றபோது, மின் கம்பிகள் அறுந்து விழுகின்றன. அதற்காக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும்' என்று கேட்டிருக்கின்றார். அதற்கு மாற்று வழிதான் ஏற்பாடு செய்யமுடியுமேயொழிய, இவ்வாறு மின் கம்பிகள் விழுவதற்காக நாம் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு துணை மின் நிலையம் அமைப்பது என்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், கொடைக்கானல் பகுதியில் 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு டிரான்ஸ்பார்மர்கள் இருக்கின்றன. அவற்றில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் அளவிற்குக்கூட மின் பளு இல்லை. 11 சதவிகிதம் மட்டும்தான் இருக்கிறது. அதனால்தான் ஏற்கெனவே அந்தப் பகுதியிலே மின்னழுத்தத்தைப் பொறுத்தவரைக்கும் சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நான் சொன்னேன். அந்தப் பகுதியில் அடிக்கடி காற்று வீசுகின்ற காரணத்தினால், மின் கம்பிகள் அறுந்து விழுகின்றன; அதற்காக ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவ்வாறு செய்வதென்பது சாத்தியமில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, அந்தப் பகுதி மலைப்பாங்கான இடமாக இருக்கின்ற காரணத்தினால், அதற்கு மாற்று வழி என்ன இருக்கிறது என்பது குறித்து ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. ஐ.பி. செந்தில்குமார்: கிட்டத்தட்ட 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்டது மேல்மலை பகுதி. அதனால்தான் அந்தப் பகுதிக்கென்று ஒரு துணை மின் நிலையம் வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இந்த மின் கம்பிகள் அறுந்து விழுவதனால் மட்டும் நான் சொல்லவில்லை. பல நாட்கள் பல கிராமங்கள் இருளில் இருக்கக்கூடிய நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. கொடைக்கானல் ஒட்டுமொத்த மலைப்பகுதிகளிலேயே, மேல்மலைப் பகுதி அதிகமாக சுற்றுலாப்

பயணிகளைக் கவர்ந்த பகுதியாகும். நானும் அரசின் விதிமுறைகளைத் தெரிந்திருக்கிறேன். இருந்தபோதிலும், மலைப் பகுதிகளுக்கு விதிவிலக்குகள் அளித்து, அங்கே ஒரு துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டும். சீரான மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த மின்சாரம் அங்கே கிடைக்க வழிவகை செய்தால், பொருளாதார ரீதியாக அங்கே வாழ்கிற விவசாயிகளின் வாழ்க்கை நிலையும் உயரும் என்ற அடிப்படையில்தான் இந்தக் கோரிக்கையை உங்களிடத்திலே முன்வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதியில், அதுவும் அவர் சொல்கின்ற பகுதியில் அடிக்கடி மின்வெட்டு இருக்கின்றது என்ற கருத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஏதாவது இயற்கைச் சீற்றத்தின் காரணமாக மின் தடைபடுகிறதேயொழிய, மின்வெட்டு என்பது கிடையாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேல்மலைப் பகுதியில் 30 ஆயிரம் மக்கள் வசிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட அந்தப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.*

திரு. கு. இராதாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதியில் மேல்காரணை ஊராட்சியில் ஒரு மேல்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 900 மாணவர்கள் படிக்கிறார்கள். அந்தப் பள்ளிக் கட்டடத்திற்கு நடுவில் ஒரு* transformer *இருக்கிறது. அதில் உயர் மின் அழுத்த கம்பிகள் நான்கு திசைகளிலும்* connection *கொடுக்கிற வகையிலே இருக்கின்றன. இயற்கைச் சீற்றத்தின் காரணமாக கம்பிகளுக்குள்*

உராய்வு ஏற்பட்டால் மின் பொறி தட்டி கீழே விழுகிறது. மின்கம்பி எப்பொழுது அறுந்து விழுமோ என்ற அச்சத்தில் மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், கண்காணிப்புப் பொறியாளரிடமும் பல முறை மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட அமைச்சருக்கும் தெரியும். அந்த மின்மாற்றியை, பக்கத்தில் உள்ள காலி இடத்திற்கு மாற்றி அமைத்து, அந்தப் பள்ளி மாணவர்களின் அச்சத்தை நிரந்தரமாகப் போக்கமுடியுமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய பகுதியிலுள்ள பள்ளியிலே இருக்கின்ற* transformer-*ஐ மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அது முக்கியமான கோரிக்கைதான். இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

மீன் இறங்குதளம்

***10961—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, மணமேல்குடி ஒன்றியத்திலுள்ள புதுக்குடி, பொன்னாகரம், வடக்கு அம்மாபட்டினம், கட்டுமாவடி ஆகிய பகுதிகளில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?